ஸ்ரீநடராஜமூர்த்தி ஆருத்ரா தேரிசனம்

ஆர்யதர்மம்.

புத். 3.

ஸஞ். 8.

பிங்களஹு மார்கசிர சுத்தபஞ்சமி.

ஸநத்ஸுஜாதீயம்.

காரியங்கள் ஸித்தியாத காலங்களில் துக்கத்தையடையாமலும் சிரமத்தையடையாமலுமிருப்பது. 5. எவ்வித தசை வந்தபோதிலும் நண்பர்களையும் புத்திரர்களையும் தாரங்களையும் கூடயாசியாமலிருத்தல். 6. யோக்கியனும் யாசிப்பவனுமாயிருப்பவனுக்குக் கேட்டதை ஈதல். இவ்வறுதியாகங்களும் அப்ரமாதத்திற்கு ஸஹாயங்கள். அரசனே, அப்ரமாதத்திற்கு எட்டு குணங்களுண்டு. அவை எவையெனில்—1. सत्यं உண்மையுரைத்தல். 2. ध्यानं சாஸ்திரத்தின் அர்த்தத்தைச் சிந்தித்தல். 3. समाधानं மனத்தை

ஒரே விஷயத்தில் ஸ்திரமாக நிறுத்தல். 4. चोद्यं ஸந்தே கிக்கப்பட்ட சாஸ்திரார்த்தத்தைக் குருவினிடம் வினவுதல். 5. वैराग्यमेव च விஷயங்களில் வெறுப்பு. 6. अस्तेयं திருட்டில்லாமை. 7. ब्रह्मचर्यं च பிரம்மசர்யம். 8. तथासंग्रहमेव च பதார்த்தங்களை நமதென்று அபிமானியாமலிருத்தல். இவ்வெட்டுக் குணங்களாலும் அப்ரமாதத்தைச் செழிக்கச் செய்யவேண்டும். இவைகளில் ஸத்யமானது சிறந்தது. ஸத்யமிருந்தால் மற்றது எளிதில் சித்திக்கும். ஸத்தியமில்லாத விஷயத்தில் மற்றவை கைகூடா. 8. सत्ये ह्यमृतमाहितं ஸத்தியத்தில் மோக்ஷம் வைக்கப்பட்டிருக்கிறது. அதாவது ஸத்யமான பிரம்மத்தைத் தானுப் அறிந்தவனுக்கே மோக்ஷமென்றிருப்பதால் ஸத்யத்திலேயே மோக்ஷம் வைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அரசனே ஸத்யத்தைக் காரும். அப்பொழுது திருதராஷ்டிரர் ஸநத்ஸுஜாதரை நோக்கி "மஹானுபாவ, ஸநத்ஸுஜாதரே, வேதவித்தான வேதியனே, பெரியோர், மற்றவன் அங்ஙனமாகானென்று சொல்லுகின்றனரே, அங்ஙனமிருக்க, ஸத்தியமுள்ளவனே சிறந்தவனென்று தாம் புகல்வது எவ்வாறோ? என்று வினவ, ஸநத்ஸுஜாதர் மறுமொழியுரைத்தனர். என்னவென்றால், "அரசனே, வேதவித்தான வேதியன் தன் வேதத்தை அத்தியயனம் செய்து அதின் விதிப்படி யனுஷ்டித்து ஸத்யத்துடனிருப்பதால் அதைக்கருதியே வேதவித்தான வேதியன் மேலோனென்று அறிஞரியம்புகின்றனர். ஆகையால் என்ன விரோதமிருக்கிற" தென்றார். மறுபடியும் பாரதன் "குமார, உலகத்தோர் புராணம் முதலியவற்றுடன் நான்கு வேதங்களையும் உணர்ந்த வேதியனையே வேதியனாகக் கருதிப் புகழுகின்றனர். சிலர் நான்கு வேதங்களை மாத்திரமுணர்ந்தவர்களாயிருக்கின்றனர். சிலர் மூன்று வேதங்களையும் சிலர் இர

ண்டு வேதங்களையும், சிலர் ஒரு வேதத்தையும், சிலர் ரிக்கு இல்லாமல் பிராமணத்தை மாத்திரமும் உணர்ந்தவரா யிருக்கின்றனர். அவர்களில் எவரை நான் வேதியனாக அறிந்துகொள்வது" என்று வினவினான்.

அப்பொழுது ஸநத்ஸுஜாதர் மறுத்துரைக்கின்றார். என்னவென்றால் "அரசனே,

एकस्य वेदस्याज्ञानाद्वेदास्ते बहवः स्मृताः

ஒரு வேதத்தை அறியாமல் பலவேதங்கள் யேற்பட்டன. அதாவது வேத, வேதனம், அறிவு. அறிவுருபமான ஆத்மாவை அறியாமையால், வேத, அறிவிக்கின்ற, வேதத்தை யறிவிக்கின்ற பல வேதங்களேற்பட்டன. வேதமென்று பரமனுக்கே பெயர். அதினால்தான் வேதத்தை முக்கியமாய்க் கருத்துடன் விளக்குகின்ற சாஸ்திரத்திற்கு வேதங்களென்று பெயரேற்பட்டது. வேதவித்தான வேதியனே சிறந்தவன். முதல் வேத சப்தத்திற்கு, பரமனென்று பொருள். இரண்டாவது வேத சப்தத்திற்கு மறையென்றர்த்தம். வேதவித்தான மறையோன் சிறந்தவன். மறைகள், பிரம்மக்ஷத்ர வைச்யர்கள் மூவருக்கும் பொதுவாயினும் பிராமணர்களுக்கு அவைகளில் விசேஷமான அதிகாரமிருப்பதால் அவர்களுக்கே மறையோரென்று பெயரோங்கிற்று. மறையோர்களில் அவரவர்கள் கற்றுணர்ந்த மறைகளின் அதிகக் குறைவுகளால் ஏற்றத் தாழ்வுள்ளதாயினும் வேதமுணர்ந்த வேதியர்களில் ஏற்றத் தாழ்வு கிடையாது. வேதமென்கிற பரமனை யறிந்தவர், எந்த ஜாதியோரும் ஸமமாயினும் மறையாகிற வேதத்தால் பரமனாகிற வேதத்தை யுணர்ந்த வேதியர் வ்யவகாரத்தில் மிக்க சிறந்தவரே. வேதத்தால் வேதத்தை யுணர்வது இருபிறவியோர்கள் யாவருக்கும் சமமாயினும் வேதத்தால் வேதத்தை யுபதேசிப்பதற்கு மறையோரே அதிகா

ரம் பெற்றுளார். ஆகையால் வேதமுணர்ந்த மறையோன் ஒரு வேதியாயினும் சதுர் வேதியாயினும் ஸமமானவரே. வெறும் வேதியரில் விசேஷமுண்டு. ஆகையால் அர்சுனே உமக்குண்டான ஸந்தேகத்தை இவ்விதம் நிவிருத்தித்துக் கொள்ளும். எவ்விதமாயினும் வேதியர் யெல்லோரும் வேதியரே, அவர்கள் எல்லோரையும் நீர் மற்றிவரைக் காட்டிலும் சிறப்புற்றோரென்று அறியக்கடவீர்" என்றுரைத்து ப்ரமாதத்தை விலக்கி அறிவால் அப்ரமாதத்தை யடையக் கடவீரென்றுபதேசித்தார்.

க. ச. கிருஷ்ண சாஸ்திரி.

வியாஸாசலீயம்.

इत्युक्तमात्रे जननी मुमूर्छ
सा किंचिदाश्वास्य सुतं बभाषे ।
आलिंग्य नो वेत्सि दिशं सुतैकां
पूर्वामुदीचीमथवा प्रतीचीम् ॥ ११ ॥

இவ்விதம் உபமந்யு சொல்லிய வார்த்தையால் மாத்திரம் அவர் தாயானவள் மூர்ச்சையடைந்து பிறகு தானாகவே அற்ப ஆச்வாசம் செய்துகொண்ட பிறகு புத்திரனை ஆலிங்கனம் செய்துகொண்டு "அப்பா குழந்தாய், கிழக்கு மேற்கு வடக்கு என்கிற திக்விபாகங்கள் என்று தோன்றவில்லையே என்று சொன்னாள்.

त्वं तात दूरं बत मा प्रयासी-
स्तपो हि कर्तुं तव नास्ति शक्तिः ।
पञ्चाब्दमात्रे प्रहिते वनान्तं
मां किं वदेयुर्जननीमकाले ॥ १२ ॥

மறுபடியும் புத்திரனைப் பார்த்துத் தாயானவர் கூறுகின்றாள். "அப்பா குழந்தாய் நீ தூரதேசத்திற்குச் செல்லாதே. தவம்புரிவதற்குனக்கு சக்தியில்லை. தவம் செய்கிறதற்கு யோக்கியமில்லாத பால்யமான ஐந்தாவது வயதிலேயே உன்னை தபசுக்கு அனுப்பிவிட்டேனென்று ஜனங்கள் என்னை நிந்திப்பார்கள்."

वसन्निहैवात्मबलानुरूपं
तपश्चर त्वं यदि रोचते ते ।
तपःसहाया भवितास्मि शक्त्या
त्यक्त्वा न हि त्वामिह वस्तुमीशे ॥ १३ ॥

உனக்கு அவசியம் தவம் செய்யவேண்டுமென்கிற ஆவலிருந்தால் இங்கிருந்துகொண்டே செய். நானும் என்னால் முடிந்தவரையில் உனக்குச் சகாயம் செய்கிறேன். உன்னைவிட்டு நான் தனியாய் வசிக்கமாட்டேன்.

अत्रापि तत्रापि शिवो हि साक्षा-
त्सर्वत्रगो व्योमसमो न मूर्तः ।
मनःस्थिरत्वं सुदृढा च भक्ति-
स्तपो निदानं न तु देशभेदः ॥ १४ ॥

பிரசித்தரான சிவபெருமானானவர் அளவிடக்கூடிய வஸ்துவைப்போல் ஓரிடத்திலில்லாமல் ஆகாயம்போல் எங்கும் நிறைந்த பொருளாகையால் அரண்யத்தில் எவ்விதம் பிரகாசிக்கின்றாரோ அவ்விதமே இங்கும் பிரகாசிக்கின்றார். ஆகையால் தபஸ்ஸித்திக்கு மனதின் ஸ்திரபாவமும் சிறந்த பக்தியும் காரணமேயன்றி தேசத்தின் வேற்றுமை காரணமல்ல.

सत्यं शिवः सर्वगतो न संशय-
स्तथापि सान्निध्यममुष्य कारितम् ।
देशादिना सर्वगकृष्णवर्त्मनो
व्यक्तिर्यथा वृक्षविशेषगोचरा ॥ १५ ॥

உபமன்னியு கூறுகின்றார். "ஏ, அன்னையே, பரமசிவனார் எங்கும் பிரகாசிக்கின்றார் என்று நீ கூறியது உண்மையே. அவ்விதமிருந்தாலும் தேசம் முதலிய ஒவ்வோரிடத்தில் தான் அவர் நன்கு அறியப்படுகின்றார். எப்படி அக்கினியானது எங்குமிருப்பினும் அரணிக் கட்டையில் மாத்திரம் பிரத்தியக்ஷமாய் நன்கு பிரகாசிக்கின்றதோ அவ்விதமே.

गृहं न योग्यं तपसोऽम्ब संगत-
मित्यादिभिस्तन्निकटं न शस्यते ।
गृहान्परित्यज्य तपोवनं गताः
किं मौर्ख्यभाजो मुनयः पुरातनाः ॥ १६ ॥

"ஏ மாதாவே, பல இடையூறுகளுடன் கூடின கிரகத்தில் தவம் செய்தால் சரியாய் பூர்த்தியாகாதென்று நினைத்து முன்னோர்களான மகரிஷிகள் அரண்யத்தை யடைந்தார்களே; அவர்கள் அறிஞர்களல்லவா ?

सत्यं तपः शैशव एव नूनं
न यौवने नापि च वृद्धभावे ।
यूनो विकारस्तपसो हि विघ्नो
वृद्धस्तपः कर्तुमनीश एव ॥ १७ ॥

"தபஸ்ஸித்திக்கு பால்ய வயதுதான் முக்கியமான காலம். ஏனென்றால் யௌவனகாலத்தில் விஷயப்பிரவிர்த்தியால் தவத்திற்கு விக்னம் நேரிடும். முதிர்ந்த வயதில் ஒன்றுக்கும் சரீரம் உபயோகப்படமாட்டாது.

बालं तपस्यन्तमुदीक्ष्य देवाः
कृपां विदध्युः स हि विस्मयास्पदः ।
शिशुं तदन्यत्र च पुष्करे स्थितं
पश्यन्दयालुर्हि जनोऽनुकम्पते ॥ १८ ॥

"பின்னும் தவம்புரியும் பாலனைப் பார்த்து விண்ணவர்கள் இச்சிறு வயதிலருந்தவம் செய்கிறானென்று ஆச்சரியப்

படும்படியாய் கிருபை செய்வார்கள். சிறந்ததான லௌகிக காரியத்தைச் செய்யும் சிசுவைப் பார்க்கும் தயையோடு கூடிய ஜனமும் அதினிடத்தும் கருணை பாராட்டவில்லையா?

औत्तानपादिः किल पञ्चहायन-
स्तपश्चचारातिसुदुःसहं ततः ।
श्रीविष्णुमुद्दिश्य स चाप दुर्लभं
पदं न किं ते श्रुतिगोचरं गतः ॥ १९ ॥

"உத்தானபாதருடைய புதல்வரான துருவரும் ஐந்தாவது வயதில் ஸ்ரீலக்ஷ்மிபதியை உத்தேசித்துக் கொடோதவத்தைச் செய்து பிறரால் பெறமுடியாத சிறந்ததான பதவியையடைந்தாரென்பதை நீ கேட்கவில்லையா?

तपश्चरेयं यदि ते समीपे
दृष्ट्वा हि मामुग्रतपश्चरन्तम् ।
जायेत दुःखं प्रतिवासरं ते
ततो वरं दूरत एव वासः ॥ २० ॥

"அன்றியுமுன்னருகில் உக்கிரமான தபசை யனுஷ்டிக்கும் என்னைப் பார்க்கும் ஒவ்வொரு சமயத்திலும் உனக்கு அதிகமான துக்கம் ஏற்படும்; ஆகையால் நான் தூரமான வேறு இடத்தில் வசிப்பதுதான் உசிதம்.

आत्मानमन्यं च नशक्नुवन्त्या-
स्त्रातुं विदेशे गमनं मया ते ।
दुःखाच्च दुःखं तदिहास्स्व मात-
र्गृध्नन्त्यभीष्टं मम नित्यमेव ॥ २१ ॥

"உன்னையும் பிறரையும் பாதுகாப்பதற்குச் சக்தியற்றவளாயிருக்குமுனக்கு என்னுடன் கூட வேறு தேசத்திற்கு வரும்படி நேர்ந்தால் அதிக துக்கத்திற்குக் காரணமாகும். ஆகையால் ஏ மாதாவே, நீ இங்குதானே வசித்துக்கொண்டிரு. என் இஷ்டத்தை எப்பொழுதும் பூர்த்தி செய்வார்கள்—கவலை வேண்டாம்."

इत्थं शंकरविजये काव्येऽस्मिन्व्यासशैलमुनिरचिते ।
सर्गो द्वितीय आसीत्प्राप्तसमाप्तिः समात्तविविधार्थे ॥

இவ்விதம் வியாஸசைலர் என்கிற மகரிஷியாலியற்றப்பட்ட ஸ்ரீ சங்கரவிஜயமென்கிற காவ்யத்திலுடைய பற்பல பொருளுடன் விளங்கும் இரண்டாவது சர்க்கமானது முடிவு பெற்றது.

பக்தி.

இனி குருவென்ற பதத்தின் பொருளும் பர்யாய பதங்களின் பொருள்களும், அவர்களிடம் பக்தி செய்யவேண்டு மென்பதும் சிறிது கூறப்படும்.

गुकारस्त्वन्धकारः स्याद्रुकारस्तन्निवर्तकः ।
अन्धकारनिरोधित्वाद्गुरुरित्युच्यते बुधैः ॥
गकारः सिद्धिदः प्रोक्तो रेफः पापस्य हारकः ।
उकारो विष्णुरव्यक्तस्त्रितयात्मा गुरुः स्मृतः ॥

அஞ்ஞானமாகிற விருளை நீக்கி ஞானமாகிற வொளியினைத் தருவதாலும், ககாரமானது ஸித்தியைக் கொடுப்பதாயும் ரேபமானது பாபத்தைப் போக்கடிப்பதாயும் உகாரமானது ஸர்வவியாபகரான விஷ்ணுவைச் சொல்வதாயுமிருப்பதாலும் குருவெனச் சாற்றுகின்றனர் பெரியோர். ஆகையாற்றான்,

" अज्ञानतिमिरान्धस्य ज्ञानाञ्जनशलाकया ।
चक्षुरुन्मीलितं येन तस्मै श्रीगुरवे नमः ॥ "

என்று கூறப்பட்டிருக்கின்றது. आचार्यः, देशिकः, उपाध्यायः । இது முதலியவை யொருபொருட் சொற்கள்.

आचिनोति हि शास्त्राणि आचारे स्थापयत्यपि ।
स्वयमाचरते तस्मादाचार्यः परिकीर्तितः ॥

அனேக நன்னூல்களைச் செய்தும், உலகிலாங்காங்கு பரவச் செய்தும் தானுமம்முறை யனுசரித்தும் வருபவனேயாசிரியன். दिशति विद्यामिति देशिकः । வித்தையினைத் தருபவனே தேசிகன். उपेत्य अस्मादधीयत इत्युपाध्यायः । இவரிடஞ்சென்று கற்றுவருவதால் உபாத்தியாயரென்றும் கூறப்பெற்றது.

கல்வியினூங்கில்லை சிற்றுயிர்க்குற்றதுணை யென்றபடி, யெவ்வுயிர்க்கு முயிர்த்துணையாயிருப்பதால், அத்தகைத்த கல்வியினைத் தந்து கரையேற்றி வைப்பதாலிப் போதகாசிரியரிடம் நல்லன்பு செலுத்தி நலமடைதல் நமது கடமைகளிலின்றியமையாததிஃதொன்று. ஆதலின் முதலில் எடுத்துக்கொண்டபடி गुरुभक्तिं सदा कुर्यात् என்று தொடங்கினர். குருவினிடத்தன்பு பொருந்தியவற்கே போதகர் விளக்கிய பொருள்களும் கூறப்பெறாத தத்துவ விஷயங்களும் நன்கு விளங்கும். அதனாலேயே, तस्यैते अकथिता ह्यर्थाः என்றுங் கூறினர். ஆசிரியரிடம் பக்தி செய்ய வேண்டுமென்றுமிவரே பரமசிவனென்றும், வேதங்களும் ஸ்மிருதிகளும் நன்கு புகர்வன.

'आचार्यदेवो भव, आचार्यवान्पुरुषो वेद ।'

"शिवे रुष्टे गुरुस्त्राता गुरौ रुष्टे न कश्चन ।
तस्माच्छुद्धमना नित्यं गुरुमाराधयेद्ध्रुवम् ॥

गुरुं दृष्ट्वा समुत्तिष्ठेदभिवाद्य कृताञ्जलिः ।
न तैरुपविशेत्सार्धं विवदेन्नात्मकारणात् ॥
जीवनार्थमपि द्वेषाद्गुरुभिर्नैव भाषणम् ।
उदितोऽपि गुणैरन्यैर्गुरुद्वेषी पतत्यधः ॥' इति कूर्मपुराणे ॥

'ऋचं वा यदि वार्धर्चं पदं वा यदि वाक्षरम् ।
सकाशाद्यस्य गृह्णीयान्नियतं तत्र गौरवम् ॥' इति स्मृतिरत्नाकरे ।

'अल्पं वा बहु वा यस्य श्रुतस्योपकरोति यः ।
तमपीह गुरुं विद्याच्छ्रुतोपक्रियया तया ॥' इति मनुः ।

என்றிவ்வாறு கூறியிருப்பதாலே சிறிதளவு படித்தாலும் அன்னவரைக் குருவெனக்கொண்டே, பணி செலுத்தல் வேண்டும். தவறினால் கொடிய பாதகத்திற்காளாய் நின்று பரலோகத்தினின்று நழுவி நரகிற் கிடப்பது தவராது கிட்டும். இதையே வேதமாதாவும் வற்புறுத்துகின்றாள்,

'नैवं विदुषाचार्यान्तेवासिनौ अन्योन्यस्मै द्रुह्यातां यो द्रुह्यति भ्रश्यते स्वर्गाल्लोकात् ॥' என்றும்

'गुरुद्रोहजपापेन सर्वपापाधिकेन च ।
तेजः पराक्रमो विद्या क्षिणोति च दिने दिने ॥
गुरुसंसेवया नित्यं ज्ञानं वीर्यं यशो बलम् ।
वर्धते विपरीतं स्याद्गुरुद्रोहेण कर्मणा ॥'

என்று ஹாலாஸ்ய மாகாத்மயத்திலும் விளக்கப்பட்டிருக்கின்றது. இதற்குத் தக்க சான்றாக விந்திரன் பழிதீர்த்த படலமே போதும். ஆதலின் குருத்ரோஹத்தைச் சிறிதும் மனதில் நினைத்தலாகாவென்பது சித்தம்.

ஆசிரியர்களென்ற பெரியோர்கள், கலைகள் பல கற்றுமுணர்ந்தவராயும் அசூயையில்லாதவராயும், கோபமில்லாதவராயும் தன் மாணாக்கர்கள் போதனுமுறையில் எவ்வளவு வருத்தியும், அவ்வார்த்தைக்குவப்பவராயும் பொருளாசையற்றவராயும், அறிவினைப் புகட்டுவதிற் சமர்த்தராயும், ஆசாரசீலராயும், அந்தந்த பாலர்கட் புத்திக்கேற்றவாறு கற்பிக்கும் திறமை வாய்ந்தவராயும், பரசிவபக்தி நிறைந்தவராயுமிருப்பதால், அன்னவர்களுடன் பழகிவரும் சிறிய பாலர்களாயினும் நல்வினையே நாடி நலம் பெறுவார்களென்பதிற் சிறிதேனுமையம் நிகழுமிடமுளதோ! உண்டேல் தெய்வகதியை நினைந்து வருந்துவதே தக்கதோர் பரிஹாரமாகும். ஒருவனுக்கு, மடைமையாற்

நீங்கிழைத்தலே லியற்கையாயின், அந்த ஸ்வபாவத்தை மாற்றப் பிரமனாலுமாகாதே!

'यश्च निम्बं परशुना यश्चैनं मधुसर्पिषा ।
यश्चैनं गन्धमाल्याद्यैः सर्वत्र कटुरेव सः ॥'

வேம்பினைக் கோடாலிகொண்டு குறைத்தாலுஞ் சரியே! நெய் தேன் முதலிய சுவையுள்ள த்ரவ பதார்த்தத்தைத் தண்ணீர் பாய்ச்சுவதற்கு மாறாக வதனதாலவாலத்திற் பாய்ச்சி வளர்த்தாலுஞ் சரியே!! சந்தனம் மாலை முதலியவைகளாலதனை யலங்கரித்துப் பூஜித்தாலுஞ் சரியே!!! இப்பதார்த்தங்கள் சம்பந்தித்த விடத்திலாவது சிறிது கசப்பு நீங்கலாகாதா!!! அந்தோ! அவ்வேம்பு முழுது முன்னிலுமதிகங் கசப்புள்ளதாய்த் தோன்றுமேயல்லாமல் வேறில்லையென்பதியாவர்க்குந் தெற்றென விளங்கும். ஆகையாற்றான் கவி கேஸரியான பவபூதி மகா கவியும் தானியற்றிய உத்தரராம சரிதமென்றவோர் நாடகத்தினுள்ளே,

'वितरति गुरुः प्राज्ञे विद्यां यथैव तथा जडे
न हि खलु तयोर्ज्ञाने शक्तिं करोत्यपहन्ति वा ।
भवति च तयोर्भूयान्भेदः फलं प्रति तद्यथा
प्रभवति शुचिर्बिम्बोद्ग्राहे मणिर्न मृदां चयः ॥'

என்று கூறியுள்ள பாசுரமொன்றே போதும். அதாவது சிறந்தவோராசிரியன், தன்னிடமுள்ள மாணாக்கர்களில் அறிவுள்ள ஒருவனுக்கெவ்வண்ணம் போதிப்பரோ அவ்வண்ணமே அறிவிலிக்குங் கற்பிப்பரேயலாது அவர்களுடையவறிவில், கிரஹண சக்தியை யுண்டுபண்ணுவதும், அல்லது அச்சக்தியைப் போக்கடிப்பதுமில்லை, ஆயின் பயன் தருங்காலத்தில், அன்னவரிருவற்குமதிகமான பேதமுண்டாகின்றது. அதற்கு திருஷ்டமாக பரிசுத்தமான மணியானது சிறிய வுருவாயிருந்தாலும், முன்னிருக்கும்

பெரிதான பிம்பத்தையும் முழுதும் கிரஹித்து விளங்குவது போல் களிமண்ணானது சிறிதுங் கிரஹிப்பதில்லையாதலின், சிஷ்யர்கள் அவரவர்களது அறிவினாலேயே விளங்குகின்றார் என்பது வெளிப்படையென்றால் வீணாய்ப் போதகர்களை நிந்தித்து வீண் பாதகத்திற்காளாகுவது நன்றன்று. இதனாற்றானாசிரியர்களும் வீணான அபவாதத்திற்கஞ்சியே நற்சீடனென்றும் நல்லறிவினனென்றும் கூர்ந்து நோக்கித் தேர்ந்தெடுத்து கல்வி கற்பிக்கின்றனர். அதற்கேற்பச் சீடனும் गुरुशुश्रूषया विद्या வென்றவற்றை நன்குணர்ந்தவனாய் பக்தி ச்ரத்தையோடு, குருவிடம் கலைபயின்று, சாலவுஞ் சான்றோனென விப்பூவுலகுளாரனைவருஞ் சாற்ற மேன்மையடைகின்றானென்பது நன்கு கரதலாமலகமான விஷயமன்றோ? இதுவே சரகஸம்ஹிதையில்,

एवंगुणो ह्याचार्यः । सुक्षेत्रमार्तवो मेघ इव सस्यगुणैः सुशिष्यमाशु वैद्यगुणैः संपादयति ॥ तमुपसृत्यारिराधयिषुः । उपचरेदग्निवच्च देववच्च राजवच्च भर्तृवच्चाप्रमत्तस्ततस्तत्प्रसादात्कृत्स्नं शास्त्रमधिगम्य शास्त्रदृढतायामभिधानसौष्ठवस्य, अर्थस्य विज्ञाने वचनशक्तौ च भूयः प्रयतते सम्यक् ॥

என்று விளங்குவதால் கார் காலத்திய மேகமானது நல்விடத்தைத் தனது மாரியால் வளமுளதாய்ச் செய்வதுபோல், நல்லாசிரியனும்,

पात्रविशेषे न्यस्तं गुणान्तरं व्रजति शिल्पमाधातुः ।
जलमिव समुद्रशुक्तौ मुक्ताफलतां पयोदस्य ॥

சாகரத்திலிருக்கும் முத்துச்சிப்பியிற்றங்கிய மழைத்துளியானது நல்முத்தாக பரிணமிக்கின்றதுபோல் போதகரது கல்வியும் நற்சீடனிடத்தே சென்றால் நன்மை பயக்குமென்றெண்ணியே ஸத்சிஷ்யனைத் தேடுகின்றனர். அத்தகைய ஸத்குருவையடைந்த சிஷ்யனும் மிகப் பணிவுடன் தேவர் அரசன் முதலியவர்களிடம் போல் பயபக்தி

பொருந்தியவனுயிருந்து ஸகல சாஸ்திரங்களையுங் கசடறக் கற்று போதிய பொருள் விளக்கமுங் கொண்டு "பல்லவை கற்றும் பயமிலரே, நல்லவையுணங்கு செலச்சொல்லாதவர்" என்றும் "கற்றூர் முன் தாங்கற்ற செலச்சொல்லி, மிக்காருண் மிக்ககொளல்" என்றுமுள்ள வள்ளுவருள்ளுரைப்படி சபையோர்களுவக்கச் செய்யவேண்டியவாறு வசனசாதுர்யத்தையும் முற்றிலுமடைகிறுன். ஆகவே ஆசியர்கள் தனது சிஷ்யர் மேன்பாட்டை யடையவேண்டி தானே சிரமப்படுகின்றனரென்பது கூறவும் வேண்டுமோ? ஆயினும் இங்கு தக்க சான்றாக, பரமசிவனது திருவவதாரபூதர்களாயும் உலகமுய்யவேண்டி பரமகருணையோடு ஆங்காங்கு ஸஞ்சாரஞ்செய்து நலமதை நல்குபவர்களாயுமுள்ள ஸ்ரீமத் பகவத்பாதாளான சங்கராசார்யாரவர்களின் பரம்பரையைக் கவனித்தாலிதனை யறியாச்சிலருமிலரேவென்பதென்று திண்ணமான வெண்ணம். உலகை மித்தையென்றுவர்த்த துரீயாச்சிரமிகள் முதல் முதலில் திக்விஜயம் செய்து, லோகாயதம் முதலிய பாஷண்ட துர்மதங்களைக் கண்டனஞ்செய்து, ஷண்மதங்களை ஸ்தாபனஞ்செய்து, இனிமேலுமித்துர்ச்சமயங்கள் முளைக்காதிருப்பதற்குத் தக்கவாறு தனதருமையான நற்சீடர்களுட் சிலரையாங்காங்கு நேமனஞ்செய்து, தானுமோர் நற்பதியானவிக் "கும்பகோண"த் தமர்ந்து, என்னுளுமத்வைத ப்ரசாரஞ் செய்தற்கேற்ப நற்குருக்களை தழைக்கச் செய்ததெக்காரணம்பற்றி யென்று நம்மவர் சிறிது கூர்ந்து நோக்குவாராயின் விளங்காமற் போதற்கிடனுண்டோ?!! இதனைற்றுன்றோர்கள்,

अज्ञानान्तर्गहनपतितानात्मविद्योपदेशै-
स्त्रातुं लोकान्भवदवशिखादावपापच्यमानान् ।
नानाकारैर्दृढतरमहामोहरात्रौ प्रसुप्ता-
ञ्शंभोमूर्तिश्चरति भुवने शंकराचार्यरूपा ॥

என்றனுபவமாயமிழ்தினுமினியமொழியினை மொழிகின்றனர். இத்திருவாக்கை யனுசரித்தே,

गुरुरेव परं गुरुरेव परं गुरुरेव परं गुरुरेव परम् ।
इदमेव शिवं इदमेव शिवं इदमेव शिवं इदमेव शिवम् ॥

என்றும் கூறுகின்றனர். ஆதலின் அக்கருணையங்கடலான தேசிகர்பால் என்னாளும் நாம் அன்புடையராகவிருந்து அன்னவர் திருமேனியைத் தெரிசித்தும், தேவாமிர்தத்தை நிகர்த்த சரித்திரங்களை செவியாரப் பருகியும் பரமானந்தத்தை யடையவேண்டுவதவசியமென்று ஓர் நவீன பண்டிதர் கூறுகின்றார் :—

श्रुतिद्वंद्वं श्रीमद्यमिवरचरित्रश्रवणतः
सुधाधारासार्द्रं निरवधिसुखैकास्पदमिति ।
परीतापाविष्टं नयनयुगमद्याभवदहो
जगद्गुर्वीक्षातो निरवधिकहर्षाश्रुकलिलम् ॥

கண்களிரண்டும் "सर्वेन्द्रियाणां नयनं प्रधानं" என்றபடி, நாமிருக்க, லோக குருவின் சரித்திரங்களைக் காதார கவர்ந்து, எல்லையற்ற வின்பத்தை யடைந்திருக்கிறதேயென்ற வருத்தமடைய தெய்வகதியாய் பகவத்பாதாள் சரணாரவிந்தங்களைத் தெரிசித்து அளவிலாவானந்தமுற்று, ஆனந்த பாஷ்பங்களைச் சொரிந்தனவென்று கூறுகிறார். குருலக்ஷணங்கள் எவைகளென்று நூலுணர்வாற்றெறிந்துகொள்வதைக் காட்டிலும், தற்காலம் பரமாசார்யாளாய் நின்று ஞானவொளி பரப்பி எங்கும் கருணைகடாக்ஷத்தைப் பரவச்செய்யுமித்திவ்ய மங்கள மூர்த்தியைத் தெரிசித்தால், அவையனைத்துஞ் சிறு பான்மை கூறப்பெற்றனவெனத். தெற்றெனத் தெளியீற்பாலதே. ஆதலாற்றான்

किं भो ! जनाः ! भवसरस्वति दुःखशीले
श्रान्ता निमज्य कुरुथापफलं स्वजन्म

अत्रावधत्त मम वाचि यमीन्द्रपादे
दृष्टे सुखं च सफलं भवतीह जन्म ॥

எனதருமை ஜனங்களே, துக்கரூபமான ஸம்ஸாரஸாகரத்தில் முழுகி ஏன் வாட்டமடைந்துங்கள் பிறவியை வீணாக்குகிறீர்கள்? இங்ஙனஞ் சற்றுச் செவிசாய்த்துக்கெவனியுங்கள். ஒருதடவை நமது நல்லாசிரியரான ஸ்ரீ சங்கரபகவத்பாதரை தெரிசித்தால் சர்ச்வதான ஸுகமும் வாணாளை வீணாக்காத தன்மையுமேற்படுகின்றது—என்று கூறும் நவீன பண்டிதரின் வசனம் சீர்மையானதே. தந்தை, தாய், ஆசானிம் மூவர்களே உயிர்த்துணை. அவர்களுள்ளும் அறிவினை யளித்து ஆதரிப்பதாலிவரே சிறந்தவராதலின், முக்கால்த்து முற்றுருப்பத்தி செய்ய முயலுதல் வேண்டுமென்பது முடிவான சித்தாந்தமாதலின், அன்னவர் திருவருளைப் பெற்றுத் தத்துவ விசாரணை செய்யவின்று முதலே முயலுவோமாக.

(இன்னும் வரும்.)

T. N. இராமச்சந்திர சாஸ்திரி.

வர்ண தர்மம்.

முற்காலத்திலே எவ்வர்ணத்தாரும், அவரவர்கட்குத் தக்க சாஸ்திர விசாரணைகளுள்ளவர்களாயும், மனோசக்திவாய்ந்தவர்களாயும், கடவுளிடத்தில் விசுவாஸமுள்ளவர்களாயும், தேசக்கட்டுள்ளவர்களாயும், மகா பராக்கிரமசாலிகளாயும், விளங்கினார்

கள். இன்னும் உண்மையுள்ளவர்களாயும், வாக்குத் தவ ருதவர்களாயும், பரோபகாரமுள்ளவர்களாயும், யாவரிடத் தும் அன்புடையவர்களாயும், தன்னடக்கமுள்ளவர்களா யும், தற்புகழ்ச்சியில்லாதவர்களாயுமிருந்தார்கள். அதற்குக் காரணம் வர்ணாசிரம தர்மங்கட்குத் தக்கபடி வழுவாது நடந்து, மதக்கோட்பாடுகளுக்குத் தக்கபடி, மீறாமல் நடந்துவந்ததேயென்று, யுக்தி, அநுபவம், இவைகளா லேயே நன்கு புலப்படுகிறது.

முன்னோர்கள் இவ்வித விசேஷ குணமுடையோரா யிருந்ததால்தான் அசைவற்ற மனம், பற்றுதல், வன்மம், பேராசை, சினம், துன்பம், மமதை, களை, சோம்பல், படா டோபம், முதலியவைகள் இன்னவிதமாய்த்தான், இருக்கு மென்பதையறியவேயில்லை. அதனாலேதான், இகத்தில் அநுபவிக்கவேண்டிய சுகப்பேற்றையும், தீர்க்காயுளையு மடைந்துவந்தார்கள்.

காலம் படிப்படியாய் மாறுதலடைந்தவுடனே, வெவ் வேறான வழியைக் காண்பதற்கேதுவான எண்ணங்கள், ஜனங்கள் மனதுக்குட் புகுந்தன. பூர்வீகர்களின் வழி யைக் காட்டிலும், இக்காலத்திற்குத் தக்கபடி இவ்வாறு தான் நடக்கவேண்டும், என்று பிதற்றும் நவீனர்களின் சொல்லைக் கேட்போம், என்று சென்றவர் அதிலேயே உறுதிப்பாடடையத் தலைப்பட்டனர். ஆதல் பற்றியே, இந்த ஆரியதர்ம பத்திரிகையானது, அவர்களை நன்னடக் கையில் திருப்புவதற்குத் தகுந்த தர்மங்களைத் தெளிவா யும், சுருக்கமாயும் வெளிப்படுத்தி, யாவரும் தன்னியர்க ளாவதற்கு ஸ்ரீமத் பகவத்பாதர்களால் கருணையுடன் நடை பெறப்பட்டுவருகிறது. இவ்விதம் பகவதாக்ஞைப்படி, தர்மங்களைச் சாஸ்திர விதிப்படி, எவரொருவர் நடத்து வாரோ, அவருக்கு எக்காரியமும் திடச்சித்தமாய் இட

யூறின்றி சித்திபெறும். ஆகையால் நாளை நாளையென்று காலத்தை வீணாக்காமல் தர்மங்களை நடத்தவேண்டும், தர்மத்திற்குப் பிரமாணங்கள் நான்கு. அவையாவன:— வேதம், ஸ்மிருதி, ஆசாரம், மனஸ்ஸந்துஷ்டி. ஆனால் இவையாவும், துல்யப் பிரமாணங்களாகமாட்டா. வேத மொன்றுதான், ஸ்வதந்திரப் பிரமாணமாகும். பிறகு முறையே, ஸ்மிருதி, ஆசாரம், மனஸ்ஸந்துஷ்டி, இவைப் பிரமாணங்களாகும். வேதத்தில் எவ்விதமான தர்மம், போதிக்கப்பட்டிருக்கிறதோ, அத்தர்மத்தையே முனிவர்கள், காணப்படுகிறதும், காணப்படாததுமான, வேதத்தின் பொருளை, ஞானதிருஷ்டியால் அறிந்து, அவ்விதமே தேசம், காலம், அதிகாரி, அவஸ்தை, இவைகட்குத் தக்கவாறு, ஸ்மிருதிகளை இயற்றி, வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

தேசபேதத்தில் போதாயனர் கருதுகின்றதாவது, தென்தேசத்திலும் வடதேசத்திலும் ஐந்துவிதங்களான விப்ரதிபத்திகளுண்டு. உபநயனமாகாதவரோடு புசிப்பது, ஸ்திரீகளோடு உண்பது, பழைய அன்னத்தைப் புசிப்பது, மாதுல கன்னிகையை மணம்புரிவது, அத்தையின் மகளை விவாகிப்பது, ஆகிய இவை தென்தேசத்தில் நடந்துவருகிறது. வடநாட்டிலோ, கம்பளி வியாபாரம் ஸுராபானம்

उभयतोदद्भिर्व्यवहारः

ஆயுதம் எடுத்து ஜீவித்தல் ஸமுத்திரயாத்திரை ஆகிய இவையே. விஷ்ணுபுராணப்படி, கிருதயுகத்தில், பத்துவருடங்களில் ஆகக்கூடியது த்ரேதாயுகத்தில் ஒரு ஸம்வத்ஸரத்தில் ஸாத்தியமாகும். அப்படி ஒரு வருஷத்தில் த்ரேதாயுகத்தில் ஆகக்கூடியது த்வாபரயுகத்தில் ஒரே மாதத்தில் பலிதமாகும். அப்படித் த்வாபரயுகத்தில் ஒரு மாதத்திலாகக் கூடியது கலியுகத்தில் ஒரே தினத்தில் ஸித்திக்கும் என்று, வியக்தமாய்த் தெரிகிறது. ஆகையால்

அற்பப் பிரயாஸத்தாலே, அநல்பமான பயனைப் பெறுவ தற்குக் காரணமான இக்கலியை நல்லதென்றே கூறலாம்.

அதிகாரி பேதத்தில், மூன்று வருடங்களுக்குப் போதுமான பொருளுள்ளவர், ஸோமயாகஞ் செய்யவேண்டும். ஒரு ஸம்வத்ஸரத்திற்குப் போதுமான தனமுள்ளவர், ஸோமயாகத்திற்கு முந்தின எல்லாக் கன்மாக்களையுஞ் செய்யவேண்டும். தனம் இல்லாவிடினும், எவ்விதமுயற்சியாலாவது ஆதானம் ஆதானஞ் செய்யவேண்டும் என்று மநுவின் அபிப்பிராயம். அங்ஙனமே, அவஸ்தா பேதத்திலும், மநுகூறியதாவது—"ஆயுளின் பாகத்தை நான்காகப் பங்கிட்டு, முறையே, குருகுலவாஸம், இல்லறம் புகுவது, வாநப்ரஸ்தாசிரமம், ஸந்நியாஸம் இவ்விதம், நான்கு ஆசிரமங்களையும், பிராம்மணன் அவலம்பிக்கவேண்டும்."

वयसः कर्मणोऽर्थस्य श्रुतस्याभिजनस्य च ।
वेषवाग्बुद्धिसारूप्यमाचरन्विचरेदिह ॥

என்று, வயது, கன்ம, பொருள், வேதம், குலம், வேடம், வாக்கு, புத்தி, இவைகட்கிணங்கலாக, தர்ம முறையை நடத்தவேண்டும். வேதங்களை யநுசரித்துத் தர்மங்களைத் தெரிவிக்கும், மந்வாதி நூல்கள் வேதங்கட்கு, அடுத்தப் பிரமாணங்களாகும். காளிதாஸரும் श्रुतेरिवार्थं स्मृतिरन्वगच्छत् । என்று கூறினர். ஸ்மிருதிகளுக்கு அடுத்தபடி பெரியோர்களின் ஆசாரமும் பிரமாணமாகும். தருமங்களின் சந்தேகத்தில் பெரியோர்களின் ஆசாரத்தைத் தவிர வேறு காரணங்களால் இன்னதுதான் தர்மம் என்று கொள்ள, சாத்யமாகாது. ஏனென்றால்,

अर्थोऽपि नैकः स्मृतयो विभिन्ना नैको मुनिर्यस्य वचः प्रमाणम् ।
धर्मस्य तत्त्वं निहितं गुहायां महाजनो येन गतः स पन्थाः ॥

என்று, தர்ம நூல்களின் பொருளும், தீர்மானமாகச் சிற்

சில விஷயங்களில் ஒரேவிதமாகத் தோன்றவில்லை. ஸ்மிருதிகளும் சிற்சில விடங்களில், ஒன்றோடொன்று, பேதப்பட்டிருக்கின்றன. எவருடைய வசனம் பிரமாணமாகக் கொள்ளத் தக்கதோ, அம்முனிவர் ஒருவராகவில்லை. தர்மத்தின் நுட்பமோ, குகையில் இருத்தப்பட்டிருக்கிறது. ஆகையால், பெரியோர் எவ்வழி நாடுகின்றாரோ, அதுவே கொள்ளத்தக்க, பாதையாம் என்று கற்றவர் மொழிகின்றனர். சுருதிஸ்மிருதிகளில் பரஸ்பரம் விரோதம் ஜநித்தால், ஸ்மிருதியைத் தள்ளி ச்ருதியையே பிரமாணமாகக் கொள்ளவேண்டும். विप्रतिषेधे श्रुतिलक्षणं बलीयः என்று ஆபஸ்தம்பரும் கருதுகின்றார். ஸ்மிருதிக்கும் லௌகிகாசாரத்திற்கும் விரோதம் ஸம்பவித்தால், ஸ்மிருதியே அவ்விரண்டிற்குள் கொள்ளத்தக்கதாகும்.

स्मृतेर्वेदविरोधे तु परित्यागो यथा भवेत् ।
तथैव लौकिकाचारं स्मृतिबाधात्परित्यजेत् ॥

என்று காத்தியாயனரும் மொழிந்திருக்கின்றனர். ஆசாரங்களிலும், வேறுபாடுகள் ஏற்பட்டு, ஸந்தேகம் நேரிடில், எந்தப் பாகுப்பாட்டில் மனது பற்றுகிறதோ, அவ்விதமான மனஸ் ஸந்துஷ்டியும் நான்காவது பிரமாணமாகிறது.

अकुर्वन्विहितं कर्म निन्दितं च समाचरन् ।
प्रसजंश्चेन्द्रियार्थेषु नरः पतनमृच्छति ॥

என்று மநு கூறியபடி, விதிக்கப்பட்ட கன்மாவைச் செய்யாததாலும், நிந்திக்கப்பட்ட கன்மாவைச் செய்வதாலும், புலன்களைக் கண்டவாறு விஷயங்களில் செலுத்துவதாலும், மனிதன், பாதித்தியத்தை யடைகிறான் என்று அறிந்து எவ்வருணத்தாரும், தங்கள் தங்கட்கு விதித்தவாறு, நடந்துகொள்ளவேண்டியது கடமையாகும். ஆகலபற்றி அவ்வர்ண தர்மத்தை, எனது மதிக்கெட்டியவாறு, பிராமணங்கட்குத் தக்கபடி, வரைய முன்வருகிறேன்.

பொதுவாய் நான்கு வருணத்தாருக்கும், மாதர்களுக்கும, கலப்பு வருணத்தாருக்கும், இருக்கவேண்டிய ஸாதாரண தர்மங்களாவன अहिंसा परमो धर्मः என்று, பிறருக்கு ஹிம்ஸையைக் கனவிலும் நினையாமலிருப்பது, ஸர்வப் பிராணிகளிடத்துந் தயை, உண்மை சொல்வது, சுத்தமாயிருப்பது, இனிமையாயும் ஹிதமாயும் பேசுவது, பேராசையில்லாமலிருப்பது, கார்ப்பண்ய மில்லாமலிருப்பது, அஸூயையில்லாமை, கள்ளாமை, பொறுமை முதலானவைகள். चातुर्वर्ण्यத்துக்குக் கட்டுப்பட்ட யாவருக்கும், ஸம்ஸ்காரங்களைப் பெறவேண்டியது, கடமையாகும். அவரவர்கட்குரிய பிரும்மசரியாதிகளைப் பெறுவதற்கு, ஸம்ஸ்காரங்களே அடிப்படையாகும்.

கூழாங்கல் போலிருக்கும், ரத்தினமானது, சாணையில் பிடிக்கப்பட்டு, விசேஷ ஸம்ஸ்காரங்கள் பெற்றுப் பிறகுதான், பிரகாசமுள்ளதாயும், விலை மதிக்கமுடியாததாயும், அணிந்துகொள்ளத் தக்கதாயும், மிகுந்த மேன்மையை யடைகிறது. அதுபோலவே, யாவரும் அவரவர்கட்கு விதித்த ஸம்ஸ்காரங்களைப் பெற்றுத்தான், மேன்மையைப் பெறுகிறார்கள்.

கர்ப்பாதானம் என்று தொடங்கி, அக்னிஷ்டோமாதிகளான, ஸப்த ஸோமஸம்ஸ்தைகள் என்று முடித்து 40 ஸம்ஸ்காரங்களைக் கௌமதர் கூறியிருக்கிறார். தவிர இதற்குப் பொருளும் வேண்டும்.

अथाष्टावात्मगुणाः दया सर्वभूतेषु क्षान्तिरनसूया शौचमनायासो मङ्गल-मकार्पण्यमस्पृहा ।

என்று தயை முதலான எட்டு ஆத்ம குணங்களையும் மொழிந்திருக்கிறார். ஒருவன் எல்லா ஸம்ஸ்காரங்களும் பெற்றிராவிடினும், ஏகதேசம் பெற்று ஆத்ம குணங்கள் எட்டும் பொருந்தினவனாயிருந்தால், அவன் பிரும்ம ஸாயு

ஜ்யத்தையும், பிரும்ம ஸாலோக்யத்தையும் பெறுகிறான் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

यज्ञो दानं तपश्चैव पावनानि मनीषिणाम् ।

என்ற பகவத் கீதைப்படி, திரவியயஞ்ஞம், ஞானயஞ்ஞம் எனப்படும் இருவகை யஞ்ஞங்களும், பாபக்ஷயத்திற்கும் தர்மத்திற்கும் காரணமான தானமும், தபஸ்ஸும், ஸம்ஸ்காரங்களையுண்டு பண்ணுகின்றன. அங்ஙனமே, இஷ்டப்படி புசியாமல், சரீரதாரணத்திற்குப் போதுமான ஆகாரமுட்கொள்வதும், வேதாத்தியனமும் விசேஷ தேஜஸ்ஸை யுண்டாக்குகின்றன. காமனையில்லாமல் நித்தியம் நைமித்திகம் என்று சொல்லப்படும் எக்கன்மாக்களும் தவறாது செய்யப்படின், பிரத்தியவாயங்களை விலக்கிச் சித்த சுத்தியையுண்டுபண்ணி

अयं तु परमो धर्मः यद्योगेनात्मवेदनम् ।

என்று, யாஞ்ஞியவல்கியர் கூறியபடி ஆன்மலாபத்திற்கே ஹேதுவாய் முடிவில் பரம தர்மமாகவே ஸித்திக்கிறது.

பிராம்மணன் முதலிய நான்கு வருணத்தாருக்கும், விராட்டின், முகம், கைகள், துடைகள், கால்கள், என்ற நான்கு உற்பத்திக் காரணங்கட்குத் தக்கவாறு, உத்தமத் தன்மை, நடுத்தன்மை, கடைத்தன்மைகளைப் பொருத்து சாஸ்திரங்களால் கன்மாக்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. பகவத்கீதை 18-வது அத்தியாயம் 49-வது சுலோகம்—

ब्राह्मणक्षत्रियविशां शूद्राणां च परंतप ।
कर्माणि प्रविभक्तानि स्वभावप्रभवैर्गुणैः ॥

என்பதால் இக்கருத்து வெளியாகிறது. அதற்கடுத்த

शमो दमस्तपः शौचं क्षान्तिरार्जवमेव च ।
ज्ञानं विज्ञानमास्तिक्यं ब्राह्मं कर्म स्वभावजम् ॥

1. பார்க்கப்பட்ட விஷயத்திலோ, பார்க்கப்படாத விஷயத்திலோ எங்கும் அநுபவிக்கவேண்டும் என்று எண்ணங்கொள்ளாமல், சித்தத்தை யடக்குவது என்ற அமைதி.

2. நிஷேதிக்கப்பட்ட விஷயங்களில், புலன்களைப் போகவிட்டாது தடுப்பதாகிய அடக்கம்.

3. மனோவாக்காயங்களாலாகிற தபஸ்.

4. ஆறுவிதமான சுத்தி, அவையாவன உள்ளத்தாலும், வெளிப்படையாலும், ஆகக்கூடியன. பொய்யாமையால் முகசுத்தி, பராந்நத்தியாகத்தால் ரஸநாசுத்தி, பிரதிக்கிரகத்தை விடுவதால், பாணி சுத்தி, விதித்த, பிரும்ம சரியப்படி நடப்பதால் கச்சசுத்தி, ராகத்வேஷாதிகளைத் தள்ளுவதால், மனச்சுத்தி, விதிக்கப்பட்டதைச் செய்வதால் கிரியாசுத்தி.

5. பிறரால் நிந்திக்கப்பட்டாலும் அடிக்கப்பட்டாலும், சித்தவிகாரமடையாமலிருப்பதாகிற பொறுமை.

6. மனோவாக்காயமென்னும் முக்கரணங்களாலும் எப்போதும் ஒரே மாதிரியாக யிருக்கும் நேர்மை.

7. கற்ற வேதசாஸ்திரங்களின் பொருளை யறிவதாகிற ஞானம்.

8. அநுஷ்டிக்கத் தக்கதோ, அநுஷ்டிக்கத் தாகாததோ உள்ள விஷயத்தில், தடையில்லாத, சாஸ்திரப்பொருளின் நிச்சயரூபமான அநுபவம்.

9. இக்கன்மா அவசியஞ் செய்யத்தக்கது. இதனால் ஈசுவரர் திருப்தியடைகிறார் என்று கன்மாவிலும், கன்மபயனிலும், சிரத்தை ரூபமான ஆஸ்திக்யமும், சகாரத்தால், ஆசிரியன், வேதம், ஈசுவரன் இவர்களிடத்தில் பயபக்திகளும் ஏவ்காரத்தால் இவை, பிராம்மணனுக்கு அவசியம் இருக்கவேண்டியவையென்று தீர்மானமாகத் தெரிகிறது.

स्वभावज என்றதால் ஸத்வகுணச் சிறப்பாலோ, முகத்திலுற்பவித்ததாலோ, பிராம்மண ஜாதிக்குத் தக்கதான இக்கன்மா சாஸ்திரத்தால் விதிக்கப்பட்டிருக்கிறது என்று ஏற்படுகிறது. அமைதிமுதல் ஆஸ்திக்ய பரியந்தமான கன்மாக்கள் முதல் மூவர்ணத்தாருக்கும் பொதுப்படையாய்ப் பொருந்தத் தக்கதாயினும், ஸத்வகுணங்களையடைந்த பிராம்மணர்களுக்கு, வெல்லத்தில் தித்திப்புப்போல், இயற்கையாயும் கட்டாயமாயும் இருக்கவேண்டியன. மற்றவர்கட்கு முயற்சியாலேயே ஏற்படத் தக்கன என்று காட்டுவதற்கு ब्रह्मकर्म என்று சொல்லப்பட்டிருக்கிறது ஆகையால் மோக்ஷத்திற்கு நெருங்கின ஸாதனமான பிராம்மணியம் வாய்ந்தவர்கள், விதிப்படி கன்மாவைச் செய்து வழிபடவேண்டியது.

இனி க்ஷத்திரியர்களின் கன்மாவை விசாரிப்போம்.

शौर्यं तेजो धृतिर्दाक्ष्यं युद्धे चाप्यपलायनम् ।
दानमीश्वरभावश्च क्षात्रं कर्म स्वभावजम् ॥

1. வீரர்களையும் ஸம்ஹாரஞ் செய்யத்தக்க சௌரியமாகிற பாராக்கிரமமும்,

2. பலவான்களும் வியந்துகொள்ளத்தக்க துணிவும்,

3. ஆபத்காலத்திலும், சித்தவிகாரமடையாமலிருக்கும் धैर्य மாகிற வன்மையும்,

4. பிரதிகூலம் நேர்ந்தாலும் தன் காரியத்தை முடித்துக்கொள்ளும் திறமை வாய்ந்த கூர்மையும்,

5. பிராணிகளுக்கு அபாயம் நேரிடுங்காலத்திலும், போரில் புறங்கொடாமையும்,

6. ஸத்பாத்திரமறிந்து கொடுத்தலாகிற கொண்டையும்,

7. பிரபாவாதிசயத்தால் தர்மநெறி தவறாது, பிரஜா பரிபாலனமாகிற, அடக்கியாளுந் தன்மையும்,

சகாரத்தாலும் அபியாலும், சௌரியம் முதற்கொண்டு ஈசுவர பாவபரியந்தமான யாவும் க்ஷத்திரியர்கட்குரியனவாக, சாஸ்திரத்தால் விதிக்கப்பட்டிருக்கின்றன. இவ்விடத்திலும் ஸ்வபாவஜ என்ற பதத்தால், ஸத்வகுணமிசிரமான ரஜோகுண ஸ்வபாவத்தாலோ, கைகளினின்று உற்பவித்ததாலோ, அவை ஏற்படத்தக்கன என்று பொருள் கொள்ளத்தக்கது.

कृषिगोरक्ष्यवाणिज्यं वैश्यकर्म स्वभावजम् ।

என்றபடி வைசியர்கட்கு, பயிரிடுவது, பசுக்களைக் காப்பது, கிரயவிக்கிரய ரூபமான வியாபாரம் இம்மூன்றும் ரஜோமிசிரமான தமோகுணத்தாலோ, துடைகளினின்று உற்பத்தி பெற்றதாலோ, செய்யத் தக்கவையெனச் சாஸ்திரம் ஓதுகிறது.

परिचर्यात्मकं कर्म शूद्रस्यापि स्वभावजम् ॥

த்ரைவர்ணிகர்களைத் தொண்டுதொட்டு ஊழியஞ்செய்வதே, சூத்திரர்கட்கு, கேவல தமோகுணத்தாலோ கால்களினிருந்து ஜநித்ததாலோ, ஏற்பட்ட கடமையென்று சாஸ்திரம் வற்புறுத்துகிறது.

பிராம்மணாதிகளான நான்கு வருணத்தாருக்கும், சமாதிகளான ஜாதிகுணங்களை முதலில் வெளிக்காட்டினோம். தினந்தோறும் ஸந்தியாவந்தனத்தை அநுஷ்டிக்க வேண்டும். ஸாயங்காலத்திலும் காலைவேளையிலும் அக்னிஹோத்திரஞ் செய்யவேண்டும் என்பன முதலான வர்ணாசிரம தர்மத்தைப் பிந்தியுரைப்போம். ஜாதி நிமித்தமாயோ வர்ணாசிரம நிமித்தமாயோ உள்ள தர்மங்கள் நித்தியங்கள். சிரௌத ஸ்மார்த்த கன்மாக்களைப்போல், பிரதான்ங்களே

யாகும். அவைகட்கு அங்காங்கி பாவம் கிடையாது. ஆகையால் ஜாதி தர்மப்படி வழுவாது நடந்துகொண்டே, பிராம்மணன் முதலானோர், தங்கள் தங்கள் வர்ணாசிரமங்கட்குத் தக்க வைதிக கன்மாலை அநுஷ்டிக்கவேண்டும். வேறுவிதமாய்க் கூடாது.

முக்கிய கன்மாவின் ஏகதேசத்தை அநுஷ்டிப்பதால், பூர்த்தி ஏற்படாதாகையால் அதன பயன் ஸித்தியாகாது. எப்படி சிரௌத ஸ்மார்த்தங்களுள், ஒன்றைமட்டிலும் அநுஷ்டிப்பதால், ஸம்ஸ்காரம் பூரணமாக ஸித்திக்காதோ, அப்படிப்போலவே ஜாதி தர்மங்களன்றி ஸாத்தியமாகாது.

ஆகையால் சமாதிகளான ஜாதிகுணங்கள் வாய்ந்த பிராம்மணன் முதலான மூவருணத்தாரால், ஸந்தியை, அக்னிஹோத்திரம் முதலியவை செய்யத்தக்கவை.

அவ்விதமே, பணிவிடையென்ற ஜாதிகுணம் பொருந்தின சூத்திரராலும் விதித்தபடி கன்மா செய்யத்தக்கது.

பொதுவாய்க் கன்மம், இருவகைப் பயனையளிக்கிறது. சில கன்மாக்களைச் செய்யாவிடில் தோஷமாம். சிலவற்றைச் செய்தால் நற்பயனுண்டாம். அவற்றிற்கு உதாரணமாக, ஸந்தியோபாஸனை முதலானவற்றைச் செய்யாவிடில், தோஷமுண்டாகும். ஜ்யோதிஷ்டோமம் முதலிய யாகங்களைச் செய்தால் புண்ணிய விருத்தியுண்டாகும். அதையும் காலதேசத்திற்குத் தக்கவாறு செய்யவேண்டுமென, ஸ்மிருதி கர்த்தாக்கள் கூறுகின்றனர்.

(இன்னும் வரும்.)

K. V. ஸுப்பிரமணிய சாஸ்திரியள்.

கன்மம்.

ஆரியர்களே? இவ்வுலகினிற் பிறந்த எண்ணிறந்த கோடிகளுள் மானிடர்களையே மிகவுயர்குலமெனவும் ஞானமுள்ளவர்கள் எனவும் ஈசனது அனுக்கிரகத்திற்கு முக்கியஸ்தர்களென்றும் பலவாறு புகழ்ந்து கூறுகின்றது. இதற்குக் காரணங்கள் பல விருப்பினும் முக்கியமாய் நாம் கவனித்துப் பார்த்தால் கன்மத்தின் பெருமையென்பதுதான் முன் நிற்கும். அத்தகைய கன்மமென்பது இதுதானென்று நம்மாரியர்கள் ஒருவாறு அறிந்திருப்பினும் அதன் ஸ்வரூபம் இத்தகையதுதானென வரைந்து கூறச் சக்தியற்றவர்களாய் இருப்போம். ஆயினும் இது நமக்கோர் குற்றமாகாது. இக்கன்மமென்பது இத்தகையதென்பதை வெளிப்படையாய்க் கூற எவராலுமியலாதென்பதை பகவான் கீதையின் வாயிலாக வோரிடத்திற் காட்டியுள்ளார். அதாவது किं कर्म किमकर्मेति कवयोऽप्यत्र मोहिताः । கன்மம் இது அகன்மம் இதுவென்ப விஷயத்தில் ஞானிகளும் மயங்கினார்களென்றார். ஆகவே அத்தகைய கன்மம் எவ்விதம் காணக்கூடும் எனினும் ஒருவாறு இங்கு நாம் விசாரிக்க வேண்டுவதொவ்வும். ஏனெனில் நமது சாஸ்திரங்களில் எங்கு பார்த்தாலும் கன்மம் கன்மமென்றே கதறுகின்றது பாருங்கள் :—

कर्मबन्धं प्रहास्यसि । कर्मभिर्न स बध्यते । कर्मणैव हि संसिद्धिमास्थिता जनकादयः । असक्तो ह्याचरन् कर्म परमाप्नोति पूरुषः । कार्यं कर्म समाचर ।

कर्म ज्यायो ह्यकर्मणः । शरीरयात्रापि च ते न प्रसिद्ध्येदकर्मणः । कुरु कर्मैव तस्मात् त्वं । यज्ञदानतपः कर्म न त्याज्यं । गहना कर्मणो गतिः । ज्ञात्वा शास्त्रविधानोक्तं कर्म कर्तुमिहार्हसि । कर्मणा बध्यते जीवः ।

கன்மபந்தத்தைத் தொலைப்பாய், கன்மங்களாற் கட்டுப்படமாட்டான்'' கன்மாவினாலேயே ஜனகன் முதலாயினோர் ஸித்தி பெற்றார்கள். பற்றில்லாமற் கன்மாவை அனுஷ்டிப்பவன் பரம்பொருளை அடைவான். காரியமான கன்மாவைச் செய். அகன்மாவைக் காட்டிலும் கன்மமே மேல். அகன்மத்திலிருந்தால் உன் சரீர யாத்திரை நடைபெறாது. ஆகையால் நீ கன்மாவையே செய். யக்ஞம், தானம், தபஸ், கன்மம் ஆகிய இவைகள் விடத்தக்கதல்ல. கன்மாவின் கதி பயங்கரமானது. சாஸ்திரங்களின் விதியிற் கூறியபடி அறிந்து இவ்வுலகிற் கன்மத்தைச் செய்யக்கடவாய். ஜீவன் கன்மத்தினால் கட்டுப்படுகிறான்'' என்பதாதி பலகோடி வசனங்கள் கூறுதலால் அது என்னவென்பதை அறிந்துகொள்ள வேண்டியது அவசியமேயாயினும் பிரகிருதத்தில் யான் அவ்விஷயத்தைக் கூறக் கொஞ்சமும் சக்தியுள்ளவனல்லவென்றாலும் என் குருநாதனது திருமொழிகளை மனதில் இறுத்திக் கொஞ்சம் எழுத முன் வந்திருக்கிறேனாதல்பற்றி அதைக் கவனித்துப் பார்ப்பீர்களென்றே துணிந்தேன்.

முதலில் இச்சொல்லைக் கவனித்தால் இது வடமொழிச் சொல்லாகும். இதற்குச் சாதாரணமாய் செய்கை என்றே பொருள் ஏற்படும். க்ரு என்ற தாதுவினின்றும் உண்டாய் இருக்கின்றது. ஆகவே செய்கை என்றால் பொதுவாய் மனிதனாலும் மற்ற ஜந்துக்களாலும் வாக்கு, மனம், சரீரம் இம்மூன்றினாலும் செய்யப்படும் காரியமெல்லாம் கன்மமென்ற சொல்லினாலே வழங்கப்பெறும். ஆனால் இது நமக்குச் சற்றேனும் பொருந்தாது. ஏனெனில் நான்

முற்கூறியவண்ணம் கன்மத்தைச் செய். கன்மத்தினுல் ஸித்தி பெறுவாய் என்பன முதலான வசனங்களால் செய் செய் என்று சாஸ்திரம் நம்மைத் தூண்டவேண்டாம். ஏனெனில் நாம் அல்லும் பகலும் மனோவாக்காயமென்று மூன்றுகளால் கணப்பொழுதேனும் கன்மம் செய்யாமலிருக்கவே மாட்டோம். அப்படி இருக்கவும் முடியாது. ஞானிகளுக்கும் கன்மம் உண்டென்பதே நமது கொள்கை. இவ்வபிப்ராயத்தை வைத்துக்கொண்டே கீதையிலும்

न हि कश्चित्क्षणमपि जातु तिष्ठत्यकर्मकृत् ।

எவனும் நொடிப்பொழுதேனும் கன்மம் செய்யாமல் இருக்கவே மாட்டானென்றது. அத்தகைய கன்மம் ஈதென்றால், இயற்கையில் ஒரு மனிதன் ஒருவனிடம் பேசிக்கொண்டிருக்கும்போதோ சும்மாவிருக்கும்போதோ பக்கத்திற் கிடக்கும் துரும்பை எடுத்துக் கிள்ளிக்கொண்டே இருக்கிறான். 10 நிமிஷத்திற்குள் தன் பக்கத்தில் ஏராளமாய்க் கிள்ளிக் கிள்ளிக் குவித்துவிடுகிறான். ஆனால் இவ்விதம் செய்யவேண்டுமென்பது அவனது ஸங்கற்பமல்ல. மற்றுமொருவன் இடைவிடாது காலை ஆட்டிக்கொண்டே இருக்கிறான். இத்தகைய பலவிகாரங்களை யாம் ஏராளமாய்க் கண்கூடாய்க் கண்டிருக்கிறோம். ஆகவே இதெல்லாம் கன்மாவென்ற சொல்லுக்குப் பொருளாகுமோ? ஆகாது. இனி எதை நாம் கன்மாவெனலாமெனின் சரீரம், வாக்கு, மனம் இம்மூன்றின் செய்கைகளினுல் ஏற்படும் பலனையே யாம் கன்மமென்போம். இதையே அதிருஷ்டம் என்றும் அபூர்வமென்றும் புகழ்வோம். இக்கன்மாவைப் பொதுவாய் எல்லா மதத்தினரும் ஏற்றுக்கொண்டனரென வொருவாறு கூறினும் நம்மைப்போல் முற்றிலும் அதையே நம்பாமற் தவிக்கின்றனர். பௌத்தமதத்தினர் கன்மாவினுற் சித்தசுத்திபெற வழியுண்டென்றேற்

றன். அவ்விதமே யவனமதத்தினரும் அக்னி உபாஸனை யென்னும் கன்மாவினால் பரலோகமுண்டென்பார். கிறிஸ்தவர்களும் அவர்களது வேதத்திற் கூறிய சில கன்மங்களைக் கையாடி வருகின்றனர். மகம்மதியரிடத்திலும் கன்மாவை விசேஷமாய்க் காணலாம். ஆகவே எம்மதத்தினரும் கொண்டாடுகிறார்களென்றாலும் நாத்திகமதத்தினர் மட்டிலும் இதை இலகுவில் நம்புவதில்லையென்றால் அவர்களுக்காக இப்போது மறுப்பு எழுதத் தேவையில்லை. நமக்கே சற்று விசாரணையினால் தெளிவு உண்டாகலாம். இக்கன்மம் இன்னும் மூன்றுவிதமாய் உள என்று கொண்டிருக்கிறோம். அதாவது ஆகாமி, ஸஞ்சிதம், ப்ராரப்தம் என. இக்கன்மங்கள் இன்னும் பொதுவாய் இருவகைப்படும். அதாவது புண்ய கன்மமென்றும் பாபகன்மமென்றும் இக்கன்மம்தான் ஈசனது தாரதம்ய சிருஷ்டிக்கு அஸ்திவாரக்கல். ஏன் ஈசன் ஒருவனைப் பிரபுவாய் சிருஷ்டித்தானென்றால் அவன் முற்சன்மத்தின் நல்வினையின் பயனென்போம். இவனை ஏன் கூனாகவும் குருடனாகவும் சிருஷ்டித்தானென்றால் அவனது தீவினையின் பயனென்போம். ஆகவே மேலாழ்ந்தபடியாகவாவது நாம் கன்மத்தை நன்கு மதிக்கிறோம். இத்தகைய கன்மத்தை நாம் மனதில் அழுந்திப் பாராமல் பலவாறு மனம்போனபடியெல்லாம் நாமும் அலையத் தலைப்பட்டதனால் இக்காலம் நமக்கு வந்திருக்கும் கேடுகளை நாம் ஏராளமாய் அனுபவிக்கக் கடமைப்பட்டோம். இதை வேண்டாமென்றால் முடியுமா?

पुण्यस्य फलमिच्छन्ति पुण्यं नेच्छन्ति मानवाः ।
न पापफलमिच्छन्ति पापं कुर्वन्ति यत्नतः ॥

மனிதர்கள் பொதுவாய்ப் புண்யத்தின் பலனாய் இவ்வுலகில் விளங்கும் தனம், கனம், வஸ்து வாகனம் முதலியவற்றை

மட்டிலும் கண்டு அது தனக்கு வேண்டுமென்று விரும்புகிறானே தவிற அது கிடைப்பதற்கு மூலகாரணமாய் புண்யத்தை யத்தனத்தோடு செய்ய விரும்புகிறானில்லை. அது போல் பாபத்தின் பலனான தாரித்திரியம் ரோகம் துக்கம் முதலியவற்றைக் கண்ணுற்றால் அப்பா நமக்கு இது வரவே கூடாதென்று மட்டிலும் அலறுகிறானே தவிற அதற்கு மூலகாரணமான பாப கன்மாவைவிட்டுத் துலைக்காமல் அதை முயற்சியுடன் செய்துகொண்டே இருக்கிறான் என்றார். இம்மாதிரி தடித்த மனதையுடைய ஒருவன் அடியில் வருமாறு நினைக்கிறானென்று ஓர் மகான் கூறுகின்றனர்.

वेदा वा स्युर्वितथवचना विस्मरेदीश्वरो वा
धर्माधर्मस्थितिविरचनामन्तको वा मृषा स्यात् ।
नित्यो वा स्यामहमिति वहूनुल्लिखन्तः समाधी-
न्मेदोवृध्या मुदितमनसः सर्वतो निर्वृताः स्मः ॥

வேதங்கள் பொய்யாய் இருக்கக்கூடாதா, அல்லது வேதங்களிற் கூறிய பல கட்டளைகளைப் பற்றியும் அவரவர்களது கன்மத்தைப் பற்றியும் ஈசன்தான் மறக்கக் கூடாதா. அல்லது யமன் என்பது பொய்யாய் இருக்கலாகாதா. அல்லது நான்தான் நித்தியமாய் இருக்கக் கூடாதாவென்று ஊந்தண்ணீரால் பெருத்த சரீரத்தோடு பலவிதமாய் நினைந்து கொண்டு சுகமாய்க் காலம் தள்ளுகின்றோம் என்று. ஆகவே நாம் மனம்போனபடியெல்லாம் நினைப்பதும் நம் மனதில் ஒன்றை தர்மமென்று நினைத்தலும் தவறு. இத்தகைய கன்மத்தையே தர்மமென்ற சொல்லாலும் வழங்கலாம். இத்தகைய கன்மத்தை நாம் நமது வேத சாஸ்திரங்களின் சொற்படிதான் நடக்கவேண்டுமேயொழிய நம் மனதின்படி நடப்பதால் கொஞ்சமும் பிரயோசன மேற்படாது. ஆதல்பற்றியே மனுவும்

वेदोदितं स्वकं कर्म नित्यं कुर्यादतन्द्रितः ।
तद्धि कुर्वन्यथाशक्ति प्राप्नोति परमां गतिम् ॥

வேதத்திற் கூறிய தன்னுடைய கன்மாவை பிரதிதினமும் கவனத்துடன் செய்துவரவேண்டும். அப்படித் தன் சக்திக்குத் தக்கபடி செய்துவருவாஞயில் பரலோகத்தைப் பெறுவான் என்றார். இந்த வசனத்தின்படி வேதத்திற் கூறப்பட்டதேயே செய்யவேண்டுமென்பதோடு स्वकं தன்னுடையது என்று சொன்னதனுல் மனிதன் எல்லோருக்கும் ஒரே மாதிரியான தர்மம் இல்லையென்றும் அவரவர்களது வர்ணுசிரம தர்மத்திற்கேற்றவாறு செய்யவேண்டுமென்றுமேற்பட்டது. இதில் சிலர் இவ்விதம் ஆக்ஷேபிக்கின்றனர். வேதத்திற் கூறப்பட்டதென்றால் எல்லா தேசத்திற்கும் வேதம் ஒன்றுதானே. தர்ம சாஸ்திரங்கள் ஒரு மாதிரிதானே? அப்படியிருக்க ஏன் தேசம்தோறும் கன்மா வேறுபட்டது? ஏன் அதையும் நமது தர்ம சாஸ்திரக்காரரும் ஒப்புக்கொண்டு यथादेशाचारमत्र व्यवस्था । தேசாசாரத்திற் கேற்றபடி இங்கு வியவஸ்தை என்று ஏற்றுக்கொண்டனர்? இன்னும் இதை யொட்டிச் சில வாசங்கைகளும் நிகழ்கின்றன. அதாவது கன்மம் நமக்கு எவ்விதம் பயனை அளிக்கின்றது? ஞான சாஸ்திரங்களினுட் புகுந்தால் கன்மதினுல் நமக்குப் பிரயோசனமில்லையென்றும், கன்மம பந்தத்திற்கு ஏதுவென்றும், கனமத்தினுல் சம்பாதிக்கப் பட்ட லோகங்களும் சுகங்களும் அழிந்துபோகின்றனவென்றும், ஞானவெளிச்சம் வந்தால்தான அஞ்ஞானமென்றும். இருள் ஒழியுமென்றும், கனமத்திற்கும் ஞானத்திற்கும்; இருளுக்கும ஒளிக்குமுள்ள நேசமென்றும், கூறுகின்றதே. கீதையிலும் —

त्याज्यं दोषवदित्येके कर्म प्राहुर्मनीषिणः ।

கன்மாவை தோஷத்தை விலக்குவதுபோல் விலக்கிவிட வேண்டுமென்று சில ஞானிகள் நினைக்கிறார்கள் என்றும்—

सर्वधर्मान्परित्यज्य मामेकं शरणं व्रज ।

எல்லா தர்மங்களேயும் விட்டுவிட்டு என்னேச் சரணமடை வாய் யென்றும் பகவானே வேதோக்த கன்மத்தை விட்டு விடும்படி கூறுகின்றனரே. ஆகவே கன்மத்தைச் செய் கிறதா விடுகிறதா? மற்றும் இவ்வுலகினில் நாம் கிருஷி முதலிய கன்மங்களேச் செய்யின் கொஞ்சகாலத்திற்குள் அதன் பலனே அனுபவிக்கிறோமே. அதுபோல் வேதத் திற் கூறிய கன்மத்தைச் செய்தவன் எவ்வித பலனே அவன் இம்மையில் அடைவான்? அப்படி ஒன்றும் நாம் காண வில்லேயே. இனி மறுமையில்தான் அதன் பலனேப் பெற லாமென்றால் இதை நாம் நம்புவதெப்படி? யாராவது ஓர் மகானாவது நமக்கு எடுத்துக் கூறலாகுமோ? நமது பிது ருக்களாவது பிள்ளேகளிடத்திற் கருணேயுடன் வந்து அப்பா இப்படி இப்படி நடக்கவேண்டும், அப்படி இல்லா விடில் நீ மிக்க கஷ்டமடைவாய் அதை நான் கண்ணுற் கண்டேன். அல்லது நான் அனுபவித்தேன் என்று சொல் லுகிறார்களா? அதுவுமில்லே. ஒருவழியுமில்லாமலிருக்கும் போது அவ்வேதத்தின் முழுபாகத்தையும் நாம் எப்படி நம்பக்கூடும் என்று மற்றும் போதாயனர்—

पञ्चधा विप्रतिपत्तिर्दक्षिणतस्तथोत्तरतः यानि दाक्षिणतस्तानि व्याख्यास्यामो, यथैतदनुपनीतेन सह भोजनं, स्त्रिया सह भोजनं, पर्युषितभोजनं, मातुलपितृष्वसृदुहितृपरिणयनमित्यथोत्तरत ऊर्णाविक्रयः, शीधुपानं, उभयतोदद्भिर्व्यवहारः, आयुधीयकं, समुद्रयानमितीतरदितरस्मिन्कुर्वन्दुष्यतीतरादितरस्मिन्तत्र तत्र देशप्रामाण्यात् ।

ஐந்துவிதமான அனுசாரங்கள் தென்தேயத்திலும் அப்படி வடதேயத்திலும் காணப்படுகின்றன. அதிற் தென்தேயத் திலுள்ளவைகளே விவரிக்கின்றேன். 1. உபனயனம் செய்யா தவனுடன் சாப்பிடுதல். 2. ஸ்திரீயோடு புசித்தல். 3. பழை யது சாப்பிடல். 4, 5, மாமன் அத்தை இவர்களுடைய

புத்திரியை மணம்புரிதல் என்பன. இனி வடதேயத்திலோ 1. கம்பளி வியாபாரம் செய்தல் 2. கட்குடித்தற். 3. 4. ஆயுதம் எடுத்து ஜீவிப்பது 5. சமுத்திரயானம் செய்தல் என்பன. ஒரு தேயத்திலுள்ளவைகளை மற்ற தேசத்தில் செய்யக்கூடாது. அதது அந்தந்த தேசத்தின் பிரமாணத்தாலவரவர்கட்குப் பிரமாணமாகலாம் என்று கூறியுள்ளார். இதனுல் தேசந்தோறும் கன்மம் வேறு வேறென்றும் அது கட்டுப்பாட்டால் அவ்வக் காலத்தியவர்கள் ஏற்படுத்திக்கொண்டதென்பதும் போதாயனர் காலத்தில் அது அவருக்குப் பிடித்தமில்லையென்றும் அதனுல் கன்மமென்பது வேதவிகிதமான நித்ய கன்மமன்றென்றும் தெற்றென விளங்கிற்று என்கின்றனர். இவைகட்கு யான் கூடியமட்டிலுமாவது முதலில் பதிற் கூறுது போவேனுயின் அதற்குமேல் எத்தனைகோடி யுக்திவாதங்கள் பேசினுலும் ஏருதென்று தெரிந்துகொண்டு இப்போது இவைகளைச் சற்று நிதான புத்தியுடன் ஆலோசிப்பாம்.

(இன்னும் வரும்.)

M. N. சுப்பிரமணிய சாஸ்திரி.

இந்து மதாசாரக் கொள்கை.

இவ்வாறே சில வருஷங்களுக்கு முன் சீர்குலைந்து பாதிரிமார்களாலும் இன்னும் மற்றவர்களாலும் மதிக்கப்பட்டிராத நம்முடைய மதத்தை நிலைநாட்டக் கருதி அமெரிக்கா கண்டத்து சிக்காகோ (Chicago) என்னுமிடத்தில் கூடியிருந்த மதாலோசனை சபை (Parliament of Reli-

gions)யில் ஸ்வாமி விவேகாநந்தர் என்பவர்களும் அனுத்தி யந்தமாய் விளங்கும். இந்த இந்துமதமானது விரோத மதங்களாகிய மகம்மதிய கிரிஸ்தவ மதங்கள் முதலிய பெரும்புயல் காற்றடிக்கும்பொழுது வேப்பமரம் அரச மரம் முதலியவைகள் நின்று வேரோடு அசைந்து கீழே விழாமல் நாணலைப்போல் தரையில் பணிந்து கிடந்து ஷெ மதங்களாகிய புயல் அடித்து ஓய்ந்தபொழுது எப்பொழு தும்போல் நிமிர்ந்து இவ்வாறு பலதடவைகளில் பலபெரு ங்காற்றுகளடித்துப் பல தடவைகளில் பணிந்துகிடந்து பலவாறு எழுந்துநின்றிருக்கின்றன வென்று சொல்லி யிருக்கிறார். அப்படி வைரத்தைப் பாராட்டுகிற இதர மதங்களாகிற பெருங்காற்றடித்து ஓய்கிற காலங்களில் பக வத்கீதையில் பகவானால் அர்ஜ்ஜுனனுக்கு உபதேசத்தில்

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम् ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

அதாவது துஷ்ட நிக்கிரஹ சிஷ்டபரிபாலனத்தின் பொருட் டும் நழுவிப்போன தர்மத்தை ஸ்தாபனம் பண்ணும் பொ ருட்டும் ஒவ்வொரு யுகத்தில் உண்டாயிருக்கிறேன் என்று சொல்லியபடிக்கும் நசிகேதர் என்பவருக்கு யமதர்ம ராஜாவால்

गोविप्रसुरसाधूनां छन्दसामपि चेश्वरः ।
रक्षामिच्छन्तनूर्धत्ते धर्मस्यार्थस्य चैव हि ॥

பசு, பிராம்மணர் தேவர்கள் வேதங்கள், தர்மம், அர்த்தம் இவைகளை ரக்ஷிக்கும் எண்ணத்துடன் ஈசுவரன் அவ்வக் காலத்தில் தேகத்தை யெடுக்கிறார், என்றபடி பகவானான வர் நம்முடைய தர்மங்களையும் தர்மங்களை யனுஷ்டிக்கிற தேவர்கள், பிராமணர்கள், ரிஷிகள், முதலியோர்களையும் ரக்ஷிக்கும்பொருட்டுப் பெருங்காற்றுக்கு பயப்பட்டு வணங்கியிருந்த மதத்தை நிலை நிறுத்துகிறார். கலியுகத்தில்

பௌத்தமதம், சமணமதம் முதலியவைகள் சத்துருவாய்ப் புறப்பட்ட காலத்தில் அப்போது தோன்றின ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாசாரியர்களும் பரமசிவனவதாரமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாறு பல ஜாதியார்களாலும் பல தேசத்தார்களாலும் கொண்டாடப்பட்டுப் பகவானாலே மாத்திரம் ஆபத்து நேரிடும்காலங்களில் காப்பாற்றப் படக்கூடிய இவ்வேதாந்த மதக்கொள்கைகள் வெகுகாலத்திற்கு முன் ஏற்பட்டதாயும் அவைகள் அப்போது அப்போது இருந்த ஜனங்களுக்குமாத்திரம் சௌகரியமாயிருந்ததாயும், இப்போதிய ஜனங்களுக்கு ஒத்து இருக்கவில்லையென்றும் அந்தக் குறைகளைச் சீர்திருத்தவேணுமென்றும் இந்துமதக் கொள்கைகள் சீர்திருத்தக் கூட்டத்தார் (Hindu Social Reformists) என்று சிலர் ஏற்பட்டுச் சுருதியின் ஆக்ஞைக்குவிரோதமாயும் ஏற்கனவே மனுஸ்மிருதியில் 2-வது அத்தியாயத்தில் 10, 11-வது சுலோகத்திற் சொல்லப்பட்டிருக்கிற சுலோகங்களின் தாத்பரியங்களுக்குத் தக்கபடியும் தர்மங்கள் ஏற்படுத்த முனிகளிருக்க அவைகளுக்குச் சரிவர நடவாதபடி, ஆபத்துகள் நேரிடும் காலத்தில் ஆபத்துகளை விலக்க பகவானே இருக்க, ஷை முனிகளையும் பகவானையும் திக்காரம் பண்ணுவதுபோல் ஒவ்வொரு வருஷமும் கூட்டங்கூடிச் சீர்திருத்தத் தீர்மானங்கள் செய்கிறார்கள். அப்படிச் சீர்திருத்தங்களில்லாமல் இப்பொழுது விளங்குகிற மதாசாரங்களும் அனுஷ்டானங்களும் இந்தியா தேசத்திற்கு, மத சம்மந்தமான யோகக்ஷேமத்திலும் ராஜ்ய தந்திர யோகக்ஷேம விஷயங்களிலும் ஜாதியாரின் அன்னியோன்னியம் ஒருமைப்பாடு முதலான விஷயங்களிலும் மிகக்கேடு உண்டாயிருக்கின்றதென்றும் சீர்திருத்தங்கள் உண்டானல் மேற்கண்ட விஷயங்களில் குறைவு நீங்கித் தேசம் மேலான ஸ்திதிக்கு வருமென்றும் சொல்லுகிறார்

கள். அவர்களுடைய வாதங்களைச் செவியுற்று ,கேட்டு நாமும் அப்படிக்கு முயன்று இந்துமத தர்மங்களைச் சீர்திருத்துவதும் விரோதமான தர்க்க சாஸ்திரத்தைக்கொண்டு வாதிப்பதும் ஏற்கனவே சொல்லியபடி நான்கும் ஐந்தும் ஒன்பதுஎன்று சொல்லுவதற்குப் பதிலாக நான்கும் ஐந்தும் பதினொன்று என்று ஏற்படுத்துகிறேன் என்று சொல்வதுபோல் ஆவதும் தவிர இதற்காக ஏற்பட்டிருக்கிற ஈஸ்வரனையும் ருஷிகளையும் பழித்து அவமானம் செய்வதாய் ஆகும்.

நம்முடைய தேசத்திற்கு எளிமையும் பஞ்சமும் நோய்களும் பரவினதற்கு, இங்கு வெளியிட அவசியமில்லாத அனேக காரணங்களில் விசேஷமான ஒரு காரணம் நமக்குப் பிரமாணங்களாகிற சுருதி ஸ்மிருதி, புராண இதிஹாசங்களின்படிக்கு தர்மத்தை நடத்தி ஷை தர்மங்களினால் நம்முடைய பல தாதாக்களாகிய இந்திராதி தேவர்களையும் ருஷிகளையும், பிதுர்க்களையும் அதிதிகளையும் பூதங்களையும் திருப்தி செய்து ஷை தேவதைகளிடமிருந்து பிரதிபலனையடையத் தவறிப்போனதே. நம்முடைய தர்மத்தினால்தான் ஷை தர்மபலத்தை யடைகிற தேவதைகள் மழை, காற்று, உஷ்ண முதலியவைகளின் மூலமாய் நமக்குச் சுபிக்ஷம் விளைவிக்கின்றார்கள். இதற்குப் பிரமாணமாகப் பகவத் கீதையில்

'सहयज्ञाः प्रजाः सृष्ट्वा पुरोवाच प्रजापतिः ।
अनेन प्रसविष्यध्वमेष वोऽस्त्विष्टकामधुक् ॥
देवान्भावयतानेन ते देवा भावयन्तु वः ।
परस्परं भावयन्तः श्रेयः परमवाप्स्यथ ॥
इष्टान्भोगान्हि वो देवाः दास्यन्ते यज्ञभाविताः ।
तैर्दत्तानप्रदायैभ्यो यो भुङ्क्ते स्तेन एव सः ॥'

அதாவது கர்மங்களோடு கூடினவர்களாய்ப் பிரஜைகளைச் சிருஷ்டித்து பிரம்மாவானவர் இந்தத் தர்மத்தினால் நீங்கள் அபிவிர்த்தியடையும் பக்ஷத்தில் இந்தத் தர்மம் உங்களுக்கு அபீஷ்டத்தைக் கொடுக்கும். தர்மத்தினால் தேவர்கள் உங்களைப்பற்றிச் சிந்திப்பார்கள். இவ்வாறு பரஸ்பரம் சிந்தித்தவர்களாய் சிரேயஸ்ஸை யடைவதும் தவிர தேவர்களும் யக்ஞத்தினால் சிந்திக்கப்பட்டவர்களாய் உங்களுக்கிஷ்டமான போகங்களைக் கொடுப்பார்கள். அப்படிக் கொடுக்கப்பட்ட பலன்களுக்குப் பிரதி, தேவர்களுக்குச் செய்யாமல் பலன்களை தாங்களே அநுபவிக்கும் பட்சத்தில் அவர்கள் கேவலம் திருடர்கள்தாம் என்று சொல்லியவாறு நாம் நம்முடைய கர்மங்களினால் தேவர்களைப் பூஜிக்கும் பக்ஷத்தில் அந்தப் பூஜையினால் திருப்தி யடைந்தவர்களாய்ப் பிரதிபலனால் மழை பொழிதல் வாயு வீசுதல் முதலிய தத்தம் அதிகாரங்களை நன்றாய்ச் செலுத்தி மானிடர்களுக்குச் சுபிக்ஷத்தை விளைவிக்கின்றார்கள். அப்படிக்கில்லாவிடில் தங்கள் உதர போஷணையைப் பற்றி மிகக் கவலையுற்றுத் தங்கள் அதிகாரங்களில் தேவர்களுக்குச் சிரத்தை குறைந்து மழை முதலியவை இல்லாமை. அதனால் நாம் தரித்திரம் பசி வியாதி முதலியவற்றால் வருந்தவேண்டியதாய் ஆகிறதே யொழிய வேறில்லை.

அப்படி இஹலோக சுகங்களுக்கு இடைஞ்சலென்றும் சீர்திருத்தம் வேண்டும் என்றும் சொல்லுவது என்னவென்று பார்க்கும் பட்சத்தில் அவைகள்

1. விதவா விவாஹங்களுக்கு இடங்கொடாமை 2. பால்விய விவாஹம் 3. ஸ்திரீகளை நாகரீகமில்லாமல் அடிமையாய் நடத்தல் 4. கடல் யாத்திரைக்கு இடங்கொடாமை 5. பஞ்சமர்களை அடிமையாய் நடத்தல் முதலியவைகளே. இவைகளில் ஒவ்வொன்றையும் சற்று விசாரித்து

இவைகளில் எவ்வளவு தூரம் நாம் ஷை சீர்திருத்தக்காரர் களால் குற்றம் சாட்டப்படுவதற்குப் பாத்தியப்பட்டிருக் கிறோம் என்று யோசித்துப் பார்ப்போம்.

1. விதவாவிவாஹம்:—

பரமாத்மாவின் ஆக்ஞையை யனுசரித்துப் பிரம்மா வின் இச்சையின் படிக்கும் ஏற்கனவே இங்கு மேலே சொல்லப்பட்டிருக்கிற ருக்யஜுர் வேத வாக்கியங்களின் படிக்கும் பிரம்மாவினிடத்திலிருந்துண்டான மனுப்பிரஜா பதியினால் ஏற்பட்ட ஸ்மிருதியின் எட்டாவது அத்தியா யத்தில் 226, 227-வது சுலோகங்களிற் சொல்லப்பட்டிருக் கிறபடி விவாஹத்தில் பாணிக்கிரஹண முதலிய மந்திரங் கள் கன்னியாப் பெண் விவாகத்திற்கு மாத்திரமேயன்றி முன்னொருவனோடு ஏற்கனவே புணர்ந்தவளுக்குக் கிடை யாது. அப்படிச் செய்துகொண்ட விவாகம் தருமகாரி யத்துக்கு உபயோகமாகாது. ஆனால் மந்திரமில்லாமல் முன்னொருவனோடு புணர்ந்த ஸ்திரீ மற்றொருவனை விவா கம் செய்துகொள்ளலாமோ வென்றால் அவள் தருமபத் தினி யாகாள். பாணிக்கிரஹண மந்திரத்தோடு கூட அக்கினியைப் பிரதட்சிணம் செய்கையில் ஸப்தபதி என்று சொல்லும்படி ஏழடிகள் வைக்கச் செய்து அம்மி மிதிக் கிற மந்திரத்தைப் பர்த்தா சொல்லுவதினால்தான் தரும பத்தினியின் பெருமை யறியத்தக்கதாயிருப்பதினால் மந் திரவத்தாகச் செய்கிற விவாகம்தான் தருமகாரியத்திற் குபயோகமான விவாகம். அந்த விவாகம் மேற்சொல் லியபடி கன்னிகைகளுக்கு தான் எடுத்திருக்கின்றது. மே லும் அதே ஸ்மிருதியில் 9-வது அத்தியாயத்தில் 47-வது சுலோகத்தில் தந்தைபொருளை பிள்ளைகள் பிரித்துக் கொள்ளுவதும் ஒரு பெண்ணைத் தானம் செய்வதும் ஒரு தரமே செய்யத் தக்கதே யொழிய சத்துக்களால் பலதரம்

செய்யத் தக்கதனவல்ல வென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் எவ்வாறு ஒருதடவை பசுவைத் தானம் பண்ணின பிற்பாடு அது தானம் வாங்கினவனிறந்து போய்விட்டால் முன் பாத்தியஸ்தனுடைய சுற்றத்தார்களுக்கே பாத்தியமோ அது மற்றொருவனுக்கு பாத்தியமில்லையோ, அந்தப் பசுவும் தன்னிச்சையால் போகவிடாமல் இறந்துபோனவனுடைய பாத்தியஸ்தர்கள் பிரயோஜனமற்றவறட்டு மாடாயினும் அதைக் கைவிடமாட்டார்களோ எவ்வாறு இறந்துபோன தானம் வாங்கினவனுடைய பாத்தியஸ்தர்கள் கவனிக்காவிடினும் அயலார்கள் அதை யபகரிக்கத் துணியார்களோ அவ்வாறே ஒரு ஸ்திரீயைக் கட்டிக்கொண்டவன் இறந்துபோனாலும் கூட இறந்துபோனவனுடைய பாத்தியஸ்தர்கள் கைவிடார்கள். அப்படிக்கு ஒருக்கால் அவர்களைக் கவனியாவிடினும் அவர்கள் அப்புருஷன் வீட்டிலேயே இருந்துகொண்டு புருஷன் உறவினர்களால் ஆதரிக்கப்பட எவ்வித பாத்தியதையையும் கொண்டவர்களாயிருக்கிறார்கள். (இன்னும் வரும்.)

சுப்பிரமணிய ஐயர்.

விஷ்ணம்பேட்டை ஸ்ரீவாணீ விலாஸினீ நான்காவது வருஷ மஹோத்ஸவம்.

விஷ்ணம்பேட்டை ஸ்ரீ வாணீ விலாஸனி ஸபையின் நான்காவது வருஷ மஹோத்ஸவம், 1917ஹூ அக்டோபர்மீ 29உ மாலை $3\frac{1}{2}$-மணிக்கு ஆரம்பித்து வெகு விமர்சையாய் திருக்காட்டுப்பள்ளி ஹைஸ்கூல் கட்டடத்தில் நடத்தப்பட்டது. அன்று Rao Bahadur

N. கிருஷ்ணசுவாமி அய்யங்கார் அவர்கள் B.A. B.L., ஹைகோர்ட்டு வக்கீல், கும்பகோணம் அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்து Our ideals "நம் கொள்கைகள்" என்கிற விஷயத்தைப்பற்றி ஓர் அருமையான பிரஸங்கம் செய்தனர். அந்த பிரஸங்கத்தால் அநேக ஜனங்கள் வர்ணாச்ரமத்தைப்பற்றி வைத்திருந்த ஒரு கெட்ட அபிப்பிராயத்தை போக்கிவிட்டது. நமக்கு சுய ஆட்சி வேண்டுமானால், அவர் அவர்கள் வர்ணாச்ரமத்தை அனுஷ்டித்தால்தான் முடியும் என்று பிரஸங்கத்தை முடித்தனர். ஸபை கௌரவ காரியதரிசியான V R. இராமச்சந்திர தீக்ஷிதர் அவர்கள் பின் வருமாறு தீர்மானங்களை வாசித்து, ஆமோதித்தார். அவைகள் எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டன.

1. இச்சபையானது எல்லா இந்து மாணாக்கர்களையும் அவர் அவர்கள் வர்ணாச்ரமத்தை அனுஷ்டித்துவரும்படி கோருகின்றது.

2. இச்சபையானது சென்ற வருஷம் திருச்சினாப்பள்ளி வர்ணாச்ரம conference-ல் தீர்மானம் பண்ணப்பட்ட Hindu Educational Trust movement என்கிறதை முற்றிலும் தழுவுகிறது. சென்னை வர்ணாசிரம தர்ம ஸபையாரை இதன் விஷயமாய் வேண்டிய முயற்சி எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறது.

3. இச்சபையானது திருக்காட்டுப்பள்ளி ஹைஸ்கூல் மேல் அதிகாரிகளை விரைவில் மத சம்பந்தமான வகுப்புக்கள் திறக்கும்படியாக கேட்டுக்கொள்ளுகிறது.

நமது சந்தாதார்களுக்கு அறிவிப்பு.

இவ்வருஷம் அதிக மாஸம் நேர்ந்தமையால் மத்தியில் ஒருமாதம் தாமதத்தின்பேரில் இந்த 8-வது ஸஞ்சிகை வெளியானதென்பதை தெரிவிக்கப்படுகிறது.